25th July 1962]

கள்ள நாணயங்கள் (காங்கேயம் சந்தை)

* 645 கேள்வி.—திரு. ஜே. மாதா கவுடர்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காங்கேயம் சந்தையில் எட்டு அணு, நாலு அணு கள்ள நாணயங்கள் மாற்ற முயற்சி நடந்திருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

(இ) அப்படியானல், எத்தனை பேர்கள் கைது செய்யப் பட்டார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) One person was arrested at Kangayam for possession of eight and four annas counterfeit coins.

திரு. ஜே மாதா கவுடர்: இந்தக் கள்ள நாணயங்கள் எந்த ஆண்டு தயாரிக்கப்பட்டவை என்பதுபற்றி கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதா ? அப்படிக் கண்டுபிடிக்கப்பட்டிருந்தால், எவ்வளவு நாணயங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன என்பது பற்றி அரசாங்கம் புலன் விசாரணை செய்திருக்கிறதா என்பதை யும் அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது சம்பந்தமாகக் கேஸ் போடப்பட்டிருக்கிறது. விவரங்கள் என்னிடம் இல்லை. ஆனல் யார் பேரில் கேஸ் போடப்பட்டிருக்கிறதோ, அந்த ஆளிடம் ரூ. 40-12-0, 13 நான்கணு கள்ள நாணயங்கள் இவை இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டு, கேஸ் போடப்பட்டிருக்கிறது.

Common Police Force for Southern Zone

* 646 Q.—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the common police force for the southern zone has come into being; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Not yet Sir.

(b) Does not arise.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, is there any proposal to have a common service on all India basis?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: There is no such proposal.

திரு. மீ. கலியாணசுந்தரம்: தென் மண்டல ஸோனல் கவுன்சில் கூட்டத்தில் இம்மாதிரி யோசனை விவாதிக்கப்பட்டது என்பது உண்மையா ? அது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதா ? அதனுடைய விவரம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது மட்டுமல்ல, முடிவும் செய்யப்பட்டது. 'தென் மண்டல ஸோனல் போலீஸ் போர்ஸ்' அமைப்பது என்று முடி